I Additional District Court, Thoothukudi.

**S.C.No. 127/2022 நாள் : 09.02.2026 அ.சா.3– திரு. ராகவன்.**

**குறுக்கு விசாரணை :–**

இறந்துபோன லெட்சுமணன் என் சித்தப்பா என்றால் தூரத்து உறவினர். எங்கள் ஊரிலிருந்து சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு சுமார் 7 கிமீ சுற்றி வரவேண்டுமென்றால் சுமார் 5 கி.மீ வரவேண்டும். நானும், அ.சா.4ம் இருசக்கர வாகனத்தில்தான் வந்தோம். நாங்கள் அங்கு வரும்போது சுமார் 100 பேர் கூட்டமாக இருந்தார்கள் என்றால் நான் அங்குதான் இருந்தேன். அப்போது 100 பேர் கூட்டமாக இருந்தார்கள். 100 பேர் அங்கு இருந்ததாக போலீஸ் விசாரணையில் சொன்னேன். இறந்துபோன லெட்சுமணனை நான் முதலில் போய் தூக்கினேனா என்றால் கூட்டம் களையும் வரையில் சரியாக பார்க்க முடியவில்லை. கூட்டத்திற்குள் யார் சண்டை போட்டார்கள் என்பதை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல பார்த்தேன். அங்கிருந்த கடை வாசல் தெற்கு நோக்கி இருந்தது. கிழக்கு பார்த்தவாறு லெட்சுமண் நின்று கொண்டிருந்தார். லெட்சுமணன் கீழே விழுந்த பிறகு நாங்கள் போய் தூக்கினோம் என்றால் சரிதான். என் உடைகளில் ரத்தம்படவில்லை. லெட்சுமணன் வேட்டி சட்டை அணிந்திருந்தார். நிறம் தெரியாது. எதிரி வேட்டி, சட்டை அணிந்திருந்தார். அங்கிருந்த அரசு மதுபானக்கடையுடன் தொடர்ந்து இரண்டு கடைகள் இருந்தது. அதன் எதிர்புறமாக ஓலை கொட்டகையில் கடை போட்டிருந்தார்கள். ஓலை கொட்டகையில் பலசரக்கு கடை போட்டிருந்தார்கள். அரசு மதுபானக்கடையில் ஒரு கண்காணிப்பு கேமரா இயங்கிக் கொண்டிருந்தது என்றால் சரிதான். ஆய்வாளர் விசாரணையில் கண்காணிப்பு கேமராவை ஆய்வு செய்தால் சம்பவம் தெரியும் என்று நான் சொன்னேன். சம்பவ இடத்திற்கு அருகில்

சாலை தென்வடலாக உள்ளது. கிழக்குபுறமாக அரசு மதுபானக்கடை உள்ளது. சம்பவம் நடந்த கொஞ்சநேரத்தில் அதாவது சுமார் 30 நிமிடத்தில் போலீசார் அங்கு வந்தார்கள். போலீசார் வந்தவுடன் என்னை விசாரித்தார்கள். நான் புகார் கொடுத்தேன். நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்றும், அதனால்தான் முன்னுக்குபின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN

Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.02.09 17:58:28 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.

I Additional District Court, Thoothukudi.

**S.C.No. 127/2022 நாள் : 09.02.2026 அ.சா.4– திரு. பஞ்சுகுமார்.**

**குறுக்கு விசாரணை :–**

இறந்துபோன லெட்சுமணன் என் தாய்மாமா. சம்பவ இடத்தில் சம்பவ சமயத்தில் சுமார் 100 பேர் இருந்தார்கள். போலீசாரும் பாதுகாப்பு பணியில் இருந்தார்களா என்றால் இல்லை. மதுபானக் கடையில் ஒரு கண்காணிப்பு கேமரா உள்ளது. எங்கள் ஊரிலிருந்து சம்பவ இடத்திற்கு 6, 7 கிமீ சுற்றி வரவேண்டுமென்றால் சரிதான். ஒரு குறுக்கு பாதையும் உள்ளது. நான் இருசக்கர வாகனத்தில் சுற்றுப்பாதையில்தான் வீரபாண்டிய பட்டிணம் சுற்றி வந்தேன். எங்கள் ஊரிலிருந்து ஆறுமுகநேரியை சுற்றியும் வரலாம். சம்பவம் நடந்தவுடன் அ.சா.3 சம்பவம் பற்றி அ.சா.5 க்கு தகவல் சொன்னார். அ.சா.5 உடனே சம்பவம் இடம் வந்துவிட்டாரா என்றால் லெட்சுமணனின் அண்ணன் ராமன் கார் எடுத்துக் கொண்டு வந்தார். அ.சா.5 சம்பவ இடத்திற்கு வரவில்லை. நேராக மருத்துவமனை வந்தார். அரசு மதுபானக் கடைக்கு கிழபுறமாக சம்பவம் நடந்தது என்றால் சரிதான். கூட்டமாக இருந்ததால் நான் சரியாக பார்க்கவில்லை என்றால் எதிரி குத்தியதை நான் பார்த்தேன். சம்பவத்தை பார்த்த மற்றவர்கள் பயந்து ஓடிவிட்டார்கள். ரத்தத்துடன் இருந்த லெட்சுமணனை தொட்டு துாக்கினேன். என் கையில் ரத்தம்பட்டது. உடைகளில் ரத்தம்படவில்லை. அந்த விபரத்தை ஆய்வாளர் விசாரணையில் சொன்னேன். ராமன் அங்கு வந்ததாக ஆய்வாளர் விசாரணையில் சொன்னேன். லெட்சுமணன் மேற்படி இடத்திற்கு காட்டுப்பாதையில்தான் வந்தார். அங்குள்ள கண்காணிப்பு கேமராவை ஆய்வு செய்தால் சம்பவம் பற்றி தெரியவரும் என்றால் சரிதான். சம்பவம் நடந்த 30 நிமிடங்கள் கழித்து போலீசார் அங்கு வந்தார்கள். அங்கு போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் புகார்

கொடுத்தேன். மேற்படி ராமன் புகார் கொடுத்தாரா என்றால் இல்லை. ராமன்தான் மேற்படி லெட்சுமணனை காரில் எடுத்துச் சென்று மருத்துவமனையில் அனுமதித்தார். இறந்துபோனவர் என் தாய்மாமா என்பதால் போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.02.09 17:58:35 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.127/2022.

Prosecution witness for P.W.6 .

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு.ஜெனோரிஷ்.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.02.2026.

Accused present.

முதல் விசாரணை

நான் தற்போது அடைக்கலாபுரத்தில் குடியிருந்து லாட்ஜில் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பவம் நடந்தபோது அடைக்கலாபுரம் அரசு மதுபானக் கடையில் மேற்பார்வையாளராக பணியில் இருந்தேன். 15.01.2020 அன்று திருச்செந்தூர் போலீசார் மாலை 5 மணியளவில் அரசு மதுபானக் கடைக்கு அடைக்கலாபுரத்திற்கு வந்தார்கள். போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயாரித்து அந்த மகஜரில் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ 2**. சம்பவ இடத்திலிருந்து போலீசார் ரத்தம்பட்ட மண், ரத்தம்படாத மண், உடைந்த பீர்பாட்டில் ஆகியவற்றை மகஜரில் கைப்பற்றினார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ 3**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

அரசு மதுபானக்கடைக்கு எதிர்புறமாக வெற்றிடம்தான் உள்ளது என்றால் சரிதான். சம்பவத்தன்று என்னுடன் சேர்த்து மொத்தம் மூன்றுபேர் மேற்பார்வையாளராக பணி செய்தோம் என்றால் சரிதான். ஆய்வாளர் விசாரணையில் என் பணி சம்பந்தப்பட்ட ஆவணத்தை

ஒப்படைக்கவில்லை. சம்பவத்தன்று நான் மேற்படி மதுபானக்கடையில் பணியில் இல்லை என்றும், அ.சா.1 தான் பணியில் இருந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. போலீசார் என்னை கைபேசி மூலம் காவல்நிலையத்திற்கு வரச் சொன்னார்களா என்றால் இல்லை. 24 மணி நேரமும் மேற்படி கடையில் ஒரு கண்காணிப்பு கேமரா இயங்கிக் கொண்டிருந்தது என்றால் சரிதான். மேற்படி பொருட்களை கைப்பற்றும்போது கண்காணிப்பு கேமரா பதிவுகளையும் போலீசார் கைப்பற்றினார்கள் என்றால் சரிதான். அதற்கு கைப்பற்றுதல் மகஜர் பிறப்பித்து என்னிடம் கையொப்பம் பெற்றார்களா என்றால் இல்லை. என் சக பணியாளர்களிடமும் கையொப்பம் பெற்றார்களா என்றால் இல்லை. அரசு மதுபானக் கடையைச் சுற்றி வெற்றிடம்தான் உள்ளது வேறு கடை எதுவும் இல்லை. மகஜரில் வெற்றிடம் இருப்பதாக காட்டித்தான் என்னிடம் கையொப்பம் பெற்றார்களா என்றால் ஞாபகமில்லை. நான் அரசு ஊழியராக இருந்ததால் போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN

Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.02.09 17:58:42 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.